மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து வருடத்திற்கு 1,006 கோயில்கள் என்ற அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள திருக்கோயில்கள், திருத்தேர்கள், திருக்குளங்களெல்லாம் புனரமைக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துக் கோயில்களிலும் குடமுழுக்கு செய்திட ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்தவகையிலே, அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை விரைவிலே பரிசீலனைக்கு எடுத்து, செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 423, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

423—

வருவாய்க் கோட்டத்தினைப் பிரித்தல்

26231*—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, புதிய வருவாய்க் கோட்டம் உருவாக்கப்படுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள்.

2013 மே 7]

மக்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பே, தேவையறிந்து திட்டங்களைக் கொடுப்பவர்தான் நமது முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, 2012 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயே, புதுக்கோட்டை வருவாய்க் கோட்டம் மக்களுடைய நிருவாக வசதிக்காக பிரிக்கப்பட்டு, இலுப்பூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் உருவாக்கப்படும் என தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்துள்ளதன் அடிப்படையிலே, தற்போது பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றில் இடம் பெறுபவர்கள் மத்தியில் வரலாறாகவே வாழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் புதுக்கோட்டை மக்களின் சார்பாக பணிவுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 424, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

424—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***17703—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—